**FORM-3**
**MINUTES OF THE COUNCIL MEETINGS**
**(See rule 5 and Serial Number 3 of Appendix - I)**
**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 மார்ச் திங்கள் 14.03.2012–ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

29.02.2012–ம் தேதி நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 27
**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான புல எண். P3-29 கொண்ட இடத்தில் இயங்கி வரும் டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையின் முகப்பு மற்றும் உட்பகுதியில் உள்ள தரைப்பாக கடைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தற்போது குத்தகை எடுப்பவரின் கைவசம் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் நகராட்சி மூலம் தரைப்பாக கடைகளோ (அ) முன்ஏல நடவடிக்கையின் கீழ் கடைகளோ கட்டிக் கொடுக்கும் நிலையில் மேற்படி இடத்தினை அபிவிருத்தி செய்ய இயலும் என்பதுடன் நகராட்சிக்கு வருவாயும் பெருமளவு ஈட்ட இயலும். எனவே மேற்படி இடத்தில் தெற்கு வடக்காக உள்ள திசையில் 100 ச.அடி அளவு கொண்ட 51 கடைகள் அமைக்கவும், மேற்படி கடைகளை உரிய வைப்புத் தொகை (ம) கூடுதல் வைப்புத் தொகை, மின்கட்டண வைப்புத் தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் விட நடவடிக்கை எடுக்கவும், தனி மின் இணைப்பு நகராட்சி ஆணையர் பெயரில் எடுத்துக்கொள்ள தடையில்லா சான்று வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : (1) தரைப்பாக கடைகளாக ஒப்படைக்கும் நிலையின், வைப்புத் தொகையாக ரூ.1.00 லட்சமும், கூடுதல் வைப்பு தொகையாக ஒன்பது மாத வாடகை நிர்ணயம் செய்யுவும், கடைகள் நகராட்சி குறித்து தரும் இடத்தில் ஆஸ்பிட்டாஸ் கூரை வசதியுடன் தரை வாடகைதாரர்கள் தங்கள் சொந்த செலவில் ஒரே சீராக அமைத்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(2) முன் ஏல நடவடிக்கையாக ஒப்படைக்கும் நிலையில் வைப்பு தொகையாக ரூ.1.00 லட்சமும் கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கும் நிலையில் கூடுதல் வைப்பு தொகை ரூ. 1.00 லட்சம் நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(3) மின்கட்டண வைப்பு தொகையாக ரூ.10,000/– நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(4) ஏலம்/ஒப்பந்தப்புள்ளிக்கு தனித்தனியே ஏலவைப்பு தொகைகள் பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(5) ஏல நடவடிக்கைகளை மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வழி விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(6) மேற்படி ஏல நடவடிக்கையில் எவரும் நீதிமன்றத்தில் வழக்கு தொடராது இருக்க கேவியட் மனு தாக்கல் செய்யவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்,
(7) அரசாணை நிலை எண். 92 நாள் 03.07.2007 படியும் அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண். அ1/11062/2012)

**தீர்மானம் எண்:161. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு 29.02.2012 தேதிய அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம் 14.03.2012ம் தேதிய இன்றைய அவசரக்கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தின் கட்டணம் வசூல் செய்யும் உரிம குத்தகைக்கு மூன்றாண்டுக்கு விட இந்நகர்மன்ற தீர்மான எண்.115, நாள் 29.02.2012–ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படாமல் போக்குவரத்திற்கு இடையூறாக பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதி (ம) உட்புற பகுதியில் பேருந்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக நிறுத்தப்படுகிறது என போக்குவரத்து துறையிடமிருந்து (ம) பொதுமக்களிடமும் இருந்து தொடர்ந்து புகார் வந்த வண்ணம் உள்ளன. எனவே நகர்மன்ற தலைவர் (ம) நகர்மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோளின்படியும், மேற்படி வாகனம் நிறுத்தும் இடத்தினை 2012–2015 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதை நிறுத்தி வைக்கவும், மேற்படி இடத்தை தினசரிச் சந்தையினை விரிவாக்கம் செய்ய திட்டப் பணிகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**தீர்மானம் எண்:162. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு 29.02.2012 தீர்மான எண்.115–ல் மன்றம் ஒப்புதல் அளித்ததை ரத்து செய்திடவும், 2012–2015 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதை நிறுத்தி வைக்கவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி செயல்படுத்த ஏதுவாக சிறப்புத்திட்ட துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>சிறப்பு திட்ட துணை விதிகள்</u>**

1970–ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு எண்.306 மற்றும் அதன் துணை பிரிவுகளின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், 2000–ம் ஆண்டின் நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின் பிரிவு 4 மற்றும் 7–ன்படி நகராட்சி நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்ற வசதியாகவும் கன்னியாகுமரி மாவட்டத்.திலுள்ள குளச்சல் நகர்மன்றத்தில் செயல்படுத்தப்பட்ட தூய்மையான குளச்சல் என்னும் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான துணை விதிகள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து அறிக்கையிடப்படுகிறது.

இந்த துணை விதிகள் அறிக்கையிடப்படும் நாளிலிருந்து, நடைமுறைக்கு வருகிறது. குளச்சல் முதல்நிலை நகராட்சி பகுதி முழுமைக்கும் இந்த துணை விதிகள் பொருந்தும்.

**<u>துணை விதிகள்</u>**

1. குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்கள், சந்துக்கள், கடை வீதிகள், குடியிருப்புகள், தொகுப்பு வீடுகள், அலுவலகங்கள், வணிக வளாகங்கள் இன்னும் பிற மக்கள் வசிக்கும் இடங்களில் உருவாகும் குப்பை மற்றும் திடக்கழிவுகளை, தெருக்களிலோ, சாலை ஓரங்களிலோ, சந்துகளிலோ, கழிவுநீர் கால்வாய்களிலோ, பொது இடங்களிலோ மற்றும் நீர் நிலைகளிலோ போடக்கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது.

2. மக்கள் வசிக்கும் மற்றும் பொது இடங்களில் உருவாகும் குப்பைகளை, மக்கும் தன்மையுள்ளவற்றினைத் தனியாகவும் மக்காத தன்மையுள்ளவற்றினைத் தனியாகவும், சேகரம் செய்யப்பட வேண்டும். மக்கும் தன்மையுள்ள குப்பைகளை பச்சை நிறக்கூடையிலும், மக்காத தன்மையுள்ள குப்பைகளை சிவப்பு நிறக்கூடையிலும் சேகரம் செய்யப்பட வேண்டும். இது வீடு அல்லது நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பாளரது கடமையாகும்.

3. இவ்வாறு தரம் பிரித்து சேகரம் செய்யப்பட்ட குப்பைகளை, நகராட்சி வாகனம் ஒவ்வொரு வீட்டிற்கும், குறிப்பிட்ட நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும். தனித்தனியாகப்

பிரிக்கப்பட்ட இந்த குப்பைகளை, வாகனத்தின் பொறுப்பாளர்களிடம், நேரில் ஒப்படைப்பது வீட்டின் / நிறுவனத்தின், உரிமையாளர் / பொறுப்பாளரது கடமையாகும்.

4. அடுக்குமாடி குடியிருப்புகள், தொகுப்பு குடியிருப்புகள் மற்றும் இதர ஒன்றுக்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் உள்ள பகுதியில் உள்ள வீடுகளது / நிறுவனங்களது உரிமையாளர் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் நகராட்சியின் வாகனம் அப்பகுதியில் வரும்போது, அவை நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தில் நேரில் கொண்டு வந்து தரம் பிரித்த குப்பைகளை ஒப்படைக்க வேண்டும். நகராட்சி பணியாளர்களால் மாடி ஏறி வந்து குப்பை பெற்றுக் கொள்ளப்பட மாட்டது.

5. மீன், கோழி, ஆடு மற்றும் இறைச்சிக்கடை நடத்துபவர்கள், கழிவுகளை தெருக்களிலோ, கழிவுநீர் வாய்க்கால்களிலோ போடக்கூடாது. அவைகளை கசிவு ஏற்படாத வகையில் பொட்டலங்களாக்கி நகராட்சி வாகனத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆனால் இதற்காக பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தக் கூடாது.

6. மருத்துவமனைக் கழிவுகள், நோய்க்கிருமி சோதனை செய்யும் கூடங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனை கழிவுகளை எக்காரணம் கொண்டும், குப்பைகளில் சேர்க்கக்கூடாது. இந்திய அரசின் 1990–ம் ஆண்டின் மருத்துவ கழிவுநீர் மேலாண்மை மற்றும் கையாளுதல், விதிகளில் கூறியவாறு மருத்துவமனை மற்றும் சோதனைச்சாலை பொறுப்பாளர்கள் தங்களது சொந்த பொறுப்பில் உரியவாறு கழிவுகளை அகற்றி அழித்தல் வேண்டும். மருத்துவமனை கழிவுகளை நகராட்சி பகுதியில் கொட்டுதல், புதைத்தல் மற்றும் எரித்தல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

7. தோட்டக் கழிவுகள், மற்றும் பண்ணைக் கழிவுகள் ஆகியவற்றை உருவாக்குவோர் / உரிமையாளர் அவற்றை தம் சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சிக்குட்பட்ட சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

8. கட்டிட இடிபாடுகளை கட்டிட உரிமையாளர் / ஒப்பந்தகாரர்கள் சாலைகளிலோ, தெருக்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவைகளை சம்மந்தப்பட்டவர்கள் தங்களது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள வேண்டும். அல்லது உரிய நிர்வாக கட்டணம் செலுத்தினால் நகராட்சி தனது வாகனம் மூலம் அவைகளை அப்புறப்படுத்தும்.

9. நகராட்சி எல்லைக்குள் பிளாஸ்டிக், ரப்பர், டயர் உள்ளிட்ட திடக்கழிவுகள் எவற்றையும் எரிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

10. திருமண மண்டபங்கள், கோயில், சர்ச், மசூதிகள், சத்திரம் ஆகியவற்றில் நடைபெறும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின் போது உருவாகும் கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ கழிவுநீர் வாய்க்கால்களிலோ அல்லது வேறு எந்த பொது இடங்களிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவற்றை தமது சொந்த வாகனம் மூலம், நகராட்சி உரக்கிடங்கில் ஒப்படைக்க வேண்டும். இதற்கான நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக கட்டணங்களை உரியவர்கள் செலுத்தினால் நகராட்சி வாகனமே அவற்றை பெற்றுச் செல்லும்.

11. உணவு விடுதிகள், தேநீர் விடுதிகள், தள்ளுவண்டி மூலம் உணவுப்பொருள் விற்பனை செய்யும் நிலையங்கள், இரவுநேர உணவுக் கடைகள், காய்கறி கடைகள் / காய்கறி மொத்த வியாபார நிலையம், மார்க்கெட் ஆகியவற்றில் உருவாகும் குப்பைகளை தெருக்களிலோ, சாலைகளிலோ அல்லது நகராட்சியின் எந்த ஒரு பகுதியிலுமோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். சம்பந்தப்பட்டவர்கள் உரிய நிர்வாகக் கட்டணம் செலுத்தினால், நகராட்சி வாகனமே இவற்றினை பெற்றுக் கொள்ளும்.

12. அச்சகங்கள், தொழிற்சாலைகள், ரசாயன மருந்து கையாளும் தொழிற்சாலை மற்றும் இதில் குறிப்பிடாத அனைத்து வணிக மற்றும் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் குப்பை கழிவுகளை நகராட்சி எல்லைக்குள் கொட்டக்கூடாது. சம்மந்தப்பட்ட நிறுவனங்களே அவற்றினை உரிய வகையில் கையாண்டு அழித்துக் கொள்ள வேண்டும்.

13. ஐஸ் பிளான்ட் தொழிற்சாலை கழிவுநீரினை நகராட்சி பகுதியில் விடக்கூடாது. இந்நிறுவன உரிமையாளர்கள் மாசுக்கட்டுப்பாடு வாரியம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி இக்கழிவு நீரினை அப்புறப்படுத்த வேண்டும்.

14. பாதசாரிகள் மற்றும் சாலை ஓரங்களிலும், இதர இடங்களிலும் குடியிருப்போர் நகராட்சி சாலை ஓரங்களில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் கூடாது. மலக்கழிவுகளை தெருக்களிலோ, சாலைகளிலோ போடக்கூடாது. அவ்வாறு போடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

15. செப்டிக் டேங்க் கழிவுகளை கழிவுநீர் வாய்க்கால்களிலோ அல்லது தெருக்களிலோ கொட்டக்கூடாது. அவ்வாறு கொட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

16. மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது 1920–ம் ஆண்டின் நகராட்சிகள் சட்டப் பிரிவு கீழ் உரிய நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1989–ம் ஆண்டின் மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன்படி குளச்சல் நகராட்சியின் சுற்றுச்சூழலுக்கு எதிராக செயல்பட்டதாக கருதி, உரிய நடவடிக்கை தொடரப்படும்.

17. மேலே உள்ள துணை விதிகளில் குறிப்பிட்ட நிர்வாக கட்டணம் விதிக்கப்படும் இனங்களைப் பொருத்தவரை, இணைப்பு–1–ல் குறிப்பிட்டவாறு ஒவ்வொரு செயல்களுக்கும், தனித்தனியாக நிர்வாகக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

18. துணை விதிகளில் குற்றம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு செயலையும் செய்யும் தனிப்பட்ட நபர் அல்லது நபர்களுக்கும், நிறுவனம் மற்றும் அமைப்புக்களது நிர்வாகிகளும், இணைப்பு – 2–வில் குறிப்பிடப்பட்டவாறு அபராதம் விதிக்கப்படும்.

19. தொடர் குற்றங்களுக்கு தினசரி ரூ.100/– வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

20. இந்த துணை விதிகளில் கூறப்பட்டுள்ள, நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராத கட்டணங்களை விதித்தல் வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு நகராட்சி ஆணையருக்கு நகர்மன்றத்தினரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இணைப்பு – 1

குளச்சல் நகராட்சியின் வர்த்தக நிறுவனங்களிலும் மற்ற நிகழ்வுகளிலும் நகராட்சி வாகனம் மூலம் குப்பை / கழிவுகளை நீக்கம் செய்வதற்கான நிர்வாக கட்டணங்களது அட்டவணை

| வ.எண். | பொருள் | நிர்வாக கட்டணம் | காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ | திருமண மண்டபங்கள் | 200.00 | ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் | திருமண மண்டப உரிமையாளர்கள் நிகழ்ச்சிகள் குறித்து முன்கூட்டியே நகராட்சிக்கு தகவல் அளிக்க வேண்டும். |
| ஆ | கோயில்கள், சர்ச், மசூதியில் நடைபெறும் விஷேசங்கள். | 50.00 | ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் | |
| இ | உணவு விடுதிகள் (பெரியது ) | 500.00 | ஒவ்வொரு மாதமும் | உணவு விடுதிகளின் வகைப்பாடு அதாவது சிறியது அல்லது பெரியது எது என்பதை நகராட்சி மன்றம் முடிவு செய்யும். |
| ஈ | உணவு விடுதிகள் (சிறியது ) | 500.00 | ஒவ்வொரு மாதமும் | |
| உ | தள்ளுவண்டிகள், இரவு கடைகள், சாலை ஓர தற்காலிக கடைகள் | 20.00 | ஒவ்வொரு மாதமும் | |
| ஊ | கோழி, மீன், ஆடு மற்றும் இறைச்சிக்கடை | 50.00 | ஒவ்வொரு மாதமும் | |
| எ | மார்க்கெட் | 50.00 | ஒவ்வொரு மாதமும் | |
| ஏ | காய்கறி மொத்த கடை, சாலையோரக்கடை மற்றும் பழக்கடைகள் | 20.00 | ஒவ்வொரு மாதமும் | |
| ஐ | கட்டிட இடிபாடுகள் அகற்றுதல் | 200.00 | சதுர அடி ஒன்றுக்கு | |
| ஒ | மருத்துவமனை படுக்கை வசதி | 1000.00 | ஒவ்வொரு வருடமும் | பெரியது மற்றும் சிறியது என்ற வகைபாடு நகர்மன்றத்தில் முடிவு செய்யப்படும். |
| ஓ | மருத்துவமனை (சிறியது) | 500.00 | ஒவ்வொரு வருடமும் | |

## இணைப்பு – 2

குளச்சல் நகராட்சி பகுதியில், இந்த துணை விதிகளை மீறி செயல்படுபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதங்கள் குறித்த அட்டவணை

| வ.எண். | பொருள் | காலம் | நிர்வாக கட்டணம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை சாலைகளில் திரியவிடுதல் | ஒரு நாளைக்கு | 25.00 | |
| 2 | மருத்துவனை கழிவுகள், ஆய்வுக்கூட கழிவுகள், நகராட்சி பகுதியில் புதைத்தல், எரித்தல். | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 1000.00 | |
| 3 | மனித கழிவுகளை சாக்கடைகளிலும், பொது இடங்களிலும் கொட்டுதல் | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 500.00 | |
| 4 | குடியிருப்பு குப்பையை சாலை, வடிகால் மற்றும் பொது இடங்களில் கொட்டுவது அழிப்பது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 100.00 | |
| 5 | குப்பைகளை எரித்தல் | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 100.00 | |
| 6 | பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் அபாயகரமான பொருட்களை எரித்தல் | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 100.00 | |
| 7 | செப்டிக் டேங்க் கழிவுகளை நகராட்சி கழிவுநீர் கால்வாயில் மற்றும் பொது இடங்களில் கொட்டுதல் | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | 2000.00 | |
| 8 | முதல் தண்டனைக்குப்பின் செய்யும் தொடர் குற்றங்களுக்கு அபராத கட்டணம் | தினசரி | 200.00 | |
| 9 | இந்த துணை பத்திகளில் விவரிக்கப்படாத இதர குற்றங்கள். | நகர்மன்ற தனி தீர்மானம் மூலம் முடிவு செய்வதன் படி | – | நகர்மன்றம் தனி தீர்மானம் மூலம் முடிவு செய்வதன்படி |

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/4596/2009)

**தீர்மானம் எண்:163. ஏகமனதாக மன்றம் ஏற்றுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.**

நிர்வாக கட்டணங்களின் அட்டவணையை கீழ்கண்டவாறு ஏற்றுகொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது

| | |
|---|---|
| அ. | திருமணமண்டபங்களுக்கு நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.200 எனவும் |
| ஆ. | கோயில்கள், சர்ச், மசூதி நிகழ்ச்சிகளுக்கு கட்டணம் இல்லை எனவும் |
| இ. | பெரிய உணவு விடுதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 எனவும் |
| ஈ. | சிறிய உணவு விடுதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 எனவும் |
| உ. | தள்ளுவண்டி, இரவுகடை, சாலை ஓர தற்காலிக கடை மாதம் ஒன்றுக்கு ரூ.20 எனவும் |

| | |
|---|---|
| ஊ. | கோழி, மீன், ஆடு மற்றும் இறைச்சி கடைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300 எனவும் |
| எ. | மார்கெட் மாதம் ஒன்றுக்கு ரூ.50 எனவும் |
| ஏ. | காய்கறி மொத்த கடைகளுக்கு மாதம் ரூ.200 எனவும், சாலையோர கடை, மற்றும் பழகடை மாதம் ஒன்றுக்கு ரூ.சராசரி ரூ.50 எனவும் |
| ஐ. | கட்டிட இடிபாடுகள் அகற்றுவதற்கு மினிடெம்போ 1க்கு ரூ.1000 எனவும் |
| ஒ. | மருத்துவமனைகள் அதிக படுக்கை வசதிகள் கொண்டவைகளுக்கு வருடம் 1க்கு ரூ.1000 எனவும் |
| ஓ. | சிறிய மருத்துவமனைகள் குறைந்த படுக்கை வசதி உள்ளவைகளுக்கு வருடத்திற்கு ரூ.500 எனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |

**அலுவலக குறிப்பினை ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**FORM-3**
**MINUTES OF THE COUNCIL MEETINGS**
**(See rule 5 and Serial Number 3 of Appendix - I)**
**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2012 மார்ச் திங்கள் 30.03.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் லாரி TN-74-Z-5304 –ன் பழுதடைந்த மின்கலப்பெட்டி மாற்றி புதிய மின்கலப்பெட்டி பொருத்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.8,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.54, நாள் 30.12.2011–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 24.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே குடிநீர் வினியோகத்தில் மேற்படி லாரியின் அவசியத்தை கருத்தில் கொண்டு துறை மூலம் பணியினை செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு M.N.கம்யூனிகேசன், நாகர்கோவில் நிறுவனத்திடமிருந்து புதிய மின்கலம் SF SONIC -100AH PBX 1000 UB2 – Sl.No.216618 வாங்கப்பட்டு பொருத்தப்பட்ட வகையில் (பழைய மின்கலத்தின் விலை நீங்கலாக) ரூ.7,800/– செலவு செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்:164. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு TN-74-V-3530–ன் பழுதடைந்த ரேடியேட்டரின் பழுதுகளை சரி செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,950/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.97 நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி துறை மூலம் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொண்டு மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் மூலம் பழுதினை சரி செய்த வகையில் ரூ.3,950/– செலவு செய்யப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ2/5030/2007)

**தீர்மானம் எண்:165. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட 10–வது வார்டில் துறைமுக பிளாட் அருகில் 8'' கழிவுநீர் குழாய் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.40,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.98, நாள் 24.01.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 16.02.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் எவரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. எனவே 28.02.2012–ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.R. தேவராஜ் ஒப்பந்தத்தாரர் | ரூ.36,171/– (மதிப்பீட்டை விட 0.67% குறைவு ) |
| 2. | திரு.P. தங்கமணி ஒப்பந்தத்தாரர் | ரூ. 36,414/– (மதிப்பீட்டை விட 0.005% குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.67% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R. தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/6991/2011)

**தீர்மானம் எண்:166. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2011 நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மூலம் மாநில அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் (Trinitty Minor and Dr.Namathu MGR ) 21.02.2012 மற்றும் 22.02.2012 ஆகிய தேதிகளில் பிரசுரம் செய்த வகையில் ரூ.13,225/–ஐ செலுத்த கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/7913/2011)

**தீர்மானம் எண்:167. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் IUDM திட்டம் 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மூலம் மாநில அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளில் (Trinitty Minor and Dr.Namathu MGR ) 21.02.2012 மற்றும் 22.02.2012 ஆகிய தேதிகளில் பிரசுரம் செய்த வகையில் ரூ.24,046/–ஐ செலுத்த கேட்டு ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/7057/2011)

**தீர்மானம் எண்:168. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2011 நிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் அதற்கான தொகையினை செலுத்த கேட்டு கீழ்காணும் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | மாலைமலர் நாளிதழ், நாகர்கோவில். | ரூ. 2,475/– |
| 2. | தினத்தந்தி நாளிதழ், நாகர்கோவில். | ரூ. 3,360/– |

மேற்காணும் பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிகைகளுக்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண். இ1/7913/2011)

**தீர்மானம் எண்:169. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை அருகில் கலையரங்கத்திற்கு எதிரில் இருசக்கர வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக ரோப் கட்டி விளம்பர பலகை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,000/—க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.87நாள் 24.01.2012—ன் மூலம் ஏற்கனவே அனுமதியளித்துள்ளது. அதன்படி பணியின் அவசர அவசியம் கருதி நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.ஆர். தேவராஜ் | ரூ. 4,950/— |
| 2. | திரு.சி.தேவகரின் சேம் | ரூ. 5,300/— |
| 3. | திரு.ஜே. ஜெபஜோஸ் | ரூ. 6,200/— |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி (ரூ.4,950/—) அளித்துள்ள திரு.ஆர்.தேவராஜ் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்காகவும், அங்கீகாரத்திற்காகவும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். tpi/7418/2011)

**தீர்மானம் எண்:170. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் கடை தெருமுனை இறுதிவரை 2" PVC பகிர்மான குழாய் அமைத்தல் மற்றும் செக்காலத்தெருவில் 3" Sluice Valve அமைத்தல் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.28,000/—க்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.99, நாள் 24.01.2012—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 06.03.2012—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு. R. தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ .25,062.00<br>(2.94% மதிப்பீட்டை விட குறைவு ) |
| 2. | திரு. P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 25,327.50<br>(1.91% மதிப்பீட்டை விட குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 2.94% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.R. தேவராஜ், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/344/2012)

**தீர்மானம் எண்:171. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினிலாரி TN-74.Z.2339–ல் தானியங்கி பொறி (செல்ப் மோட்டார்) பழுதடைந்து மினி லாரியை இயக்க முடியாத நிலையில் உள்ளதால், அதனை மாற்றி ரூ. 18,000/– உத்தேச செலவினத்தில் புதிய தானியங்கி இயந்திரம் (செல்ப் மோட்டார்) பொருத்த வேண்டியிருந்தது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் மேற்காணும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதற்கான தொகை ரூ.17,800/– வழங்கப்பட்டது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். எச்1/4008/2010)

**தீர்மானம் எண்:172. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட காரிதாஸ் காலனி, எபிக்கோர் காலனி, கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி, மாதா அமிர்தானந்தமயி காலனி, குழந்தை ஏசு காலனி ஆகியவற்றில் ரூ.2,70,000/– மதிப்பீட்டில் சிறுபாலம் மழைநீர் வடிகால் ஓடை பராமரிப்பு பணி மற்றும் சிமெண்ட் தள பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 2,65,358/–<br>(மதிப்பீட்டை விட 0.42% குறைவு ) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ.2,66,166.50<br>(மதிப்பீட்டை விட 0.11% குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.42% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P. தங்கமணி, ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.7913/2011/இ1 )

**தீர்மானம் எண்:173. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்டி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜ் சாலை குறுக்கு தெருவில் ரூ.5,62,000/– மதிப்பீட்டில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 5,59,425/–<br>(மதிப்பீட்டை விட 1.25% கூடுதல் ) |
| 2. | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 5,52,412/–<br>(மதிப்பீட்டை விட 0.02% குறைவு ) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:174. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட புதுத் தெருவில் ரூ.6,65,000/– மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பித்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C. செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | ரூ. 6,39,333.50 (மதிப்பீட்டை விட 0.91% அதிகம்) |
| 2. | திரு.S.ஜான்றோஸ், ஒப்பந்தத்தாரர் | ரூ. 6,33,469.15 (மதிப்பீட்டை விட 0.02% குறைவு) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.ஜான்றோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:175. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் முதல் பாலத்தன்கரை சாலையில் ரூ.8,90,000/– மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பித்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரர் | ரூ. 9.00.500/– (மதிப்பீட்டை விட 5.85% அதிகம்) |
| 2. | திரு.C. தேவகரிம் சேம், ஒப்பந்தத்தாரர் | ரூ. 8,50,350/– (மதிப்பீட்டை விட 0.04% குறைவு) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.C.தேவகரிம் சேம், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:176. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட வடக்கு கள்ளியடைப்பில் ரூ.5,70,000/– மதிப்பீட்டில் தார்சாலை புதுப்பித்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 5,41,664/–<br>(மதிப்பீட்டை விட 0.22% அதிகம்) |
| 2. | திரு.K. கிருஷ்ணதாஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 5,40,333. 20<br>(மதிப்பீட்டை விட 0.03% குறைவு) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.K. கிருஷ்ணதாஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:177. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட அந்தோணியார் காலனி மற்றும் ஜோசப் பெனடிக்ட் காலனி ஆகிய பகுதிகளில் ரூ.3,10,000/–மதிப்பீட்டில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 2,96,710/–<br>(மதிப்பீட்டை விட 0.04% குறைவு) |
| 2. | திரு.C. தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 2,99,885/–<br>(மதிப்பீட்டை விட 1.03% கூடுதல்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:178. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் முதல் முண்டன்பிலாவடி சாலை வரை ரூ.7,45,000/–

மதிப்பீட்டில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| **1.** | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 7,06,699/–<br>(மதிப்பீட்டை விட 0.03% குறைவு) |
| **2.** | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 7,13,925/–<br>(மதிப்பீட்டை விட 0.99% கூடுதல்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:179. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சியில் இயற்கை சீற்றம் – வடகிழக்கு பருவமழை 2011–12–ன்கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.76 நாள் 24.01.2012–ன்படி ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 07.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமி காலனி சமுதாயக்கூடம் அருகில் ரூ.10,00,000/– மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| **1.** | திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 9,89,175.40<br>(மதிப்பீட்டை விட 0.01% குறைவு) |
| **2.** | திரு.C.தேவகரிம் சேம்,<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 9,97,365/–<br>(மதிப்பீட்டை விட 0.82% கூடுதல்) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.T.ஜான் ரெக்ஸிலின் ஜோஸ், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.7913/2011/இ1)

**தீர்மானம் எண்:180. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

குளச்சல் நகராட்சி 2009–2010–ம் ஆண்டிற்கு 01.04.2009 முதல் 20.07.2009 முடியவுள்ள காலத்திற்கான வரவு செலவு தணிக்கை ( Transaction Audit ) செய்து கணனி மூலம் தட்டச்சு செய்து ஒளிநகல் எடுத்து புத்தகங்கள் கொடுத்த வகையில் அருந்ததி என்பவர் ரூ.1,850/– கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5628/2010/பி1)

**தீர்மானம் எண்:181. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்களை ரூ.90,000/– க்குள் வாங்கி கொள்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.111 நாள் 29.2.2012–ல் அனுமதியளித்துள்ளதின் அடிப்படையில், 20.03.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

1) ஜெயபிரபா டிரேடர்ஸ், தாழக்குடி – ரூ. 82,955/–

2) சரவணன் ஏஜென்சிஸ், உடையப்பன் குடியிருப்பு – ரூ. 89,225/–

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் ஜெயபிரபா டிரேடர்ஸ், தாழக்குடி நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1388/2009/எச்1)

**தீர்மானம் எண்:182. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு மினி லாரி எண். TN-74.T.5508–ன் தகுதிச்சான்று 25.02.2012–ல் முடிவடைந்ததால் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக, கீழ்கண்ட பழுதுகளை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.18,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) சர்வீஸ் செய்தல்
2) முழு பெயின்டிங் செய்தல்
3) நான்கு வீல் கிறீஸ் பேக்கிங் செய்தல்
4) மைனர் பேட்ச் ஒர்க் செய்தல்
5) எலக்ட்ரிக்கல் செக்கப் மற்றும் பின்புற இரு லைட் (இன்டிகேட்டர் ) மாற்றுதல்.
6) முன்புற மெயின் ஆக்ஸில் பழுது நீக்குதல்

(ந.க.எண்.2913/2009/எச்1)

**தீர்மானம் எண்:183. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணிக்கு செலவிடப்படும் தொகையில் 50 சதவீதம் சென்னை, இந்திய பிராணிகள் நல வாரியத்திடமிருந்தும், 50 சதவீதம் நகராட்சி பொது நிதியிலிருந்தும் செலவு செய்யப்பட வேண்டும். கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக ரூ.50,000/–க்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 1453 நாள் 20.08.2010–ல் அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் தெருவில் சுற்றி திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணியினை திருநெல்வேலி மாவட்டம் ஊத்துமலை ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட் என்ற நிறுவனத்துடன் பணியை மேற்கொள்வதற்கு 2012–2013–ம் ஆண்டிற்கு ஒப்பந்தம் செய்து மேற்கண்ட பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2868/2009/எச்1)

**தீர்மானம் எண்:184. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சியில் 16 எண்ணம் ஆழ்துளை கிணற்றிலிருந்து மின்மோட்டார் மூலம் 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வால்வு ஆப்ரேட்டிங் முறையில்

தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மின்மோட்டார்கள் நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் இயங்கி வருகிறது. எனவே மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. மேலும் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு குடிநீர் கசிவு ஏற்படுகிறது. மேலும் வால்வுகளை அடிக்கடி ஆப்ரேட் செய்வதால் பழுதுகள் ஏற்படுகிறது. மேற்காணும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 2012–2013–ம் ஆண்டுக்கு குடிநீர் விநியோகம் பராமரிப்பு பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1288/2012/இ2 )

**தீர்மானம் எண்:185. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

குளச்சல் நகராட்சி பகுதியில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஏதுவாக தகுதி வாய்ந்த வாடகையில்லா கட்டிடம் ஒன்றினை ஏற்பாடு செய்து துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்களிடம் விரைவில் ஒப்படைக்குமாறு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ந.க.எண்.2458/அ4/2012 நாள் 07.03.2012 –ல் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க தகுதி வாய்ந்த வாடகையில்லா கட்டிடம் ஒன்றினை ஏற்பாடு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

( ந.க.எண்.1169/2011/எச்1 )

**தீர்மானம் எண்:186. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

இந்நகராட்சிக்குட்பட்ட 23–வது வார்டு நரிக்கல் பகுதியில் பாம்பூரி வாய்க்காலில் ஆண்கள் குளிக்குமிட படித்துறை இடிந்து மிக மோசமான நிலையில் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி படித்துறையை சரி செய்வதற்கான மதிப்பீடு தொகை ரூ.80,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.235/2012/இ1 )

**தீர்மானம் எண்:187. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மாதாகாலனியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தின் மதில் சுவர் கட்டவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் திருமதி.எல்.சிலுவைமேரி, 15–வது வார்டு உறப்பினர் கொண்டு வந்த தீர்மானத்திற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.130, நாள் 29.02.2012–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.70,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1036/2012/இ1 )

**தீர்மானம் எண்:188. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15 மாதாகாலனி பாம்பூரி வாய்க்காலில் பெண்கள் குளிக்குமிட படித்துறை மிகவும் மோசமாக இடிந்து உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி

மேற்படி படித்துறையை சரி செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.70,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1036/2012/இ1)

**தீர்மானம் எண்:189. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மாதாகாலனியில் உள்ள வடிகால் ஓடையில் உள்ள கழிவுநீர் சாலை வழியாக பாய்ந்து சென்று பாம்பூரி வாய்க்காலில் கலப்பதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி தேங்கி நிற்கும் கழிவுநீரை அகற்றுவதற்கு 8" PVC குழாய் அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 53,000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1036/2012/இ1)

**தீர்மானம் எண்:190. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி

# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2012 மார்ச் திங்கள் 30.03.2012–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் மற்றும் தினசரிச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் தொடர்பாக 2012–2015 வரை பொது ஏலத்திற்கு நீங்கலாக இந்நகர்மன்ற தீர்மானம் எண்.115, நாள் 29.02.2012–ன்படி ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தினசரிச்சந்தையினை குத்தகைதாரர் நகராட்சி அனுமதி பெறாமல் ஆக்கிரமிப்பு செய்வதை தவிர்க்கவும், நகராட்சியின் கட்டுப்பாட்டில் குத்தகை நிபந்தனை விதிகளின்படி கொண்டு வரவும் 01.04.2012 முதல் நகராட்சியே தினசரிச் சந்தையினை ஏற்று வாடகை தொகையின் வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> :

மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் இதுவரையிலும் தினசரிச்சந்தை வளாகத்தினுள் அமைந்துள்ள கடைகள் மற்றும் தரைப்பாக கடைகளுக்கு கீழ்க்கண்டவாறு தினசரி வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளது. நகராட்சியின் வருவாய் நிதியினை பெருக்க தரைப்பாக கடைகள், கடைகள் ஆகியவற்றிற்கு கட்டணம் திருத்தி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண். | இனம் | இதுவரையிலும் வசூலிக்கப்பட்ட நாள் வாடகை – ரூ. | திருத்தி அமைக்கப்பட்ட நாள் வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பார லாறி | 90.00 | 120.00 |
| 2 | வெற்று லாறி | 50.00 | 60.00 |
| 3 | பார டிம்போ | 70.00 | 90.00 |
| 4 | வெற்று டிம்போ | 30.00 | 50.00 |
| 5 | பார கார் | 30.00 | 50.00 |
| 6 | வெற்று கார் | 15.00 | 25.00 |
| 7 | பார ஆட்டோ | 25.00 | 30.00 |
| 8 | வெற்று ஆட்டோ | 10.00 | 15.00 |
| 9 | பார மாட்டு வண்டி | 30.00 | 30.00 |
| 10 | வெற்று மாட்டு வண்டி | 15.00 | 15.00 |
| 11 | தலை சுமடு | 5.00 | 7.00 |
| 12 | ஸ்கூட்டர் லோடு | 10.00 | 12.00 |
| 13 | சைக்கிள் லோடு | 5.00 | 7.00 |
| 14 | கோழி ஒன்றுக்கு | 1.00 | 2.00 |
| 15 | ஆடு ஒன்றுக்கு | 10.00 | 15.00 |
| 16 | மாடு ஒன்றுக்கு | 15.00 | 20.00 |
| 17 | தரை வாடகை 7 x 7 நாள் ஒன்றுக்கு | 5.00 | 10.00 |
| 18 | ஸ்டால் வாடகை நாள் ஒன்றுக்கு | 25.00 | 50.00 |
| 19 | வாழைக்குலை உறை போட குலை 1–க்கு | 1.00 | 1.50 |
| 20 | மட்டன் ஸ்டால் | 35.00 | 60.00 |
| 21 | மீன் ஸ்டால் | 25.00 | 40.00 |
| 22 | சிக்கன் ஸ்டால் | 35.00 | 60.00 |

**ஆடு, மாடு அடிக்கும் உரிமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆடு 1 க்கு ரூபாய் | 10.00 | 20.00 |
| 2 | மாடு 1 க்கு ரூபாய் | 20.00 | 50.00 |

**பிஸ்மாங்கர் பீஸ் உரிமம்**

| | | | |
|---|---|---|---|
| 1 | லாறி சுமை | 90.00 | 120.00 |
| 2 | சைக்கிள் சுமை | 5.00 | 7.00 |
| 3 | மோட்டார் சைக்கிள் சுமை | 10.00 | 12.00 |
| 4 | மினி லாறி | 50.00 | 60.00 |
| 5 | தலை சுமை | 5.00 | 7.00 |
| 6 | ஆட்டோ சுமை | 25.00 | 30.00 |

( ந.க.எண்.11062/2012/அ1 )

**தீர்மானம் எண்:191. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட நாள் வாடகை தொகை கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.**

| வ.எண். | இனம் | திருத்தி அமைக்கப்பட்ட நாள் வாடகை தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பார லாறி | 120.00 |
| 2 | வெற்று லாறி | 60.00 |
| 3 | பார டிம்போ | 90.00 |
| 4 | வெற்று டிம்போ | 50.00 |
| 5 | பார கார் | 50.00 |
| 6 | வெற்று கார் | 25.00 |
| 7 | பார ஆட்டோ | 30.00 |
| 8 | வெற்று ஆட்டோ | 15.00 |
| 9 | பார மாட்டு வண்டி | 30.00 |
| 10 | வெற்று மாட்டு வண்டி | 15.00 |
| 11 | தலை சுமடு | 5.00 |
| 12 | ஸ்கூட்டர் லோடு | 15.00 |
| 13 | சைக்கிள் லோடு | 10.00 |
| 14 | கோழி ஒன்றுக்கு | 2.00 |
| 15 | ஆடு ஒன்றுக்கு | 15.00 |
| 16 | மாடு ஒன்றுக்கு | 20.00 |
| 17 | தரை வாடகை 7 x 7 நாள் ஒன்றுக்கு | 10.00 |
| 18 | ஸ்டால் வாடகை நாள் ஒன்றுக்கு | 40.00 |
| 19 | வாழைக்குலை உறை போட குலை 1–க்கு | 1.00 |
| 20 | மட்டன் ஸ்டால் | 50.00 |
| 21 | மீன் ஸ்டால் | 35.00 |
| 22 | சிக்கன் ஸ்டால் | 50.00 |

**ஆடு, மாடு அடிக்கும் உரிமம், ஆடு 1க்கு ரூ.20.00**
**மாடு 1க்கு ரூ.40.00**

**பிஸ்மாங்கர் பீஸ் உரிமம் வ.எண்.6 வரை ஏகமனதாக ஏற்றுகொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2012 முதல் 2015 வரை உள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 28.02.2012 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2009–10 வரையுள்ள ஏலத் தொகை விவரம் (ஓர்ஆண்டு – ரூ. | 28.02.2012நடைபெற்ற ஏலக்கேள்வித்தொகை விபரம் (ஓர் ஆண்டு) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | திரு. செல்வராஜ் | 83,500/– | 96,050/– |

**அ.குறிப்பு** :

(1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் ஒரு ஏலதாரர் மட்டுமே திரு.செல்வராஜ் என்பவர் கலந்து கொண்டுள்ளார்.

(2) 2009–10 ஆண்டு ஏலத்தொகையினை விட 15% மேல் அதிகபட்ச ஏலத்தொகையாக உள்ளது.

(3) நகராட்சி நேரடியாக வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லை.

(4) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு. செல்வராஜ் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.11062/2012/அ1)

**தீர்மானம் எண்:192. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு திரு.செல்வராஜ் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2012 முதல் 2015 வரை உள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 28.02.2012 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2009–10 வரையுள்ள ஏலத் தொகை விவரம் (ஓர் ஆண்டு) ரூ. | 28.02.2012 நடைபெற்ற ஏலக்கேள்வித் தொகை விபரம் (ஓர் ஆண்டு) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பொட்டல் சாலை ஓர தென்னைமரம், நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள தென்னை மரம் மேல் ஆதாயம் (மகசூல்) அனுபவிக்கும் உரிமம். | திரு. இராதகிருஷ்ணன் | 1,500/– | 1,725/– |

**அ.குறிப்பு** :

(1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் ஒரு ஏலதாரர் மட்டுமே திரு. இராதகிருஷ்ணன் என்பவர் கலந்து கொண்டுள்ளார்.

(2) 2009–10 ஆண்டு ஏலத்தொகையினை விட 15% மேல் அதிகபட்ச ஏலத்தொகையாக உள்ளது.

(3) நகராட்சி நேரடியாக வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லை.

(4) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு. இராதகிருஷ்ணன் என்பவரின் ஏலக்கேள்வி

ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.11062/2012/அ1)

**தீர்மானம் எண்:193. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு திரு.இராதாகிருஷ்ணன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2012 முதல் 2015 வரை உள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 28.02.2012 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2009–10 வரையுள்ள ஏலத் தொகை விவரம் (ஓர் ஆண்டு) ரூ. | 28.02.2012 நடைபெற்ற ஏலக்கேள்வித் தொகை விபரம் (ஓர் ஆண்டு) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேரூந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | திரு. முருகன் | 1,72,142/– | 1,98,000/– |

<u>அ.குறிப்பு</u> :

(1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் ஒரு ஏலதாரர் மட்டுமே திரு. முருகன் என்பவர் கலந்து கொண்டுள்ளார்.
(2) 2009–10 ஆண்டு ஏலத்தொகையினை விட 15% மேல் அதிகபட்ச ஏலத்தொகையாக உள்ளது.
(3) நகராட்சி நேரடியாக வசூல் செய்ய போதிய பணியாளர்கள் இல்லை.
(4) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு. முருகன் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.11062/2012/அ1)

**தீர்மானம் எண்:194. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு திரு.முருகன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2012 முதல் 2015 வரை உள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 28.02.2012 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2009–10 வரையுள்ள ஏலத் தொகை விவரம் (ஓர் ஆண்டு) ரூ. | 28.02.2012 நடைபெற்ற ஏலக்கேள்வித் தொகை விபரம் (ஓர் ஆண்டு) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியில் இருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1)திரு.பால்ஞானசேகரன்<br>2) திரு.ஞான நிக்ஸன், (து/பெ.பத்ரோஸ், (லேட்) | –<br>85,100/– | 98,000/–<br>97,900/– |

<u>அ.குறிப்பு</u> :

மேற்படி நடைபெற்ற ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். இதில் அதிகட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.பால்ஞானசேகரன் என்பவரின் ஏலக்கேள்வியினை அங்கீகரிக்கலாம்.

திரு.பால்ஞானசேகரன், ஏலதாரர் கேட்டுள்ள ஏலக்கேள்வி 2009–10–ம் ஆண்டு கோரப்பட்டுள்ள ஏலக்கேள்வியினை விட 15% அதிகமாக உள்ளது. எனவே மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.11062/2012/அ1 )

**தீர்மானம் எண்:195. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு திரு.பால்ஞானசேகரன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2012 முதல் 2015 வரை உள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 28.02.2012 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்பு தொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2009–10 வரையுள்ள ஏலத் தொகை விவரம் (ஓர் ஆண்டு) ரூ. | 28.02.2012 நடைபெற்ற ஏலக்கேள்வித் தொகை விபரம் (ஓர் ஆண்டு) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அண்ணா சிலை சமீபம் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) திரு.ஆர்.ஐயப்பன்<br>2) திரு. ஆர்.முருகன் | 3,500/–<br>– | 4,030/–<br>4,000/– |

**<u>அ.குறிப்பு</u>** :

மேற்படி நடைபெற்ற ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். இதில் அதிகட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.ஆர்.ஐயப்பன் என்பவரின் ஏலக்கேள்வியினை அங்கீகரிக்கலாம். திரு. திரு.ஆர்.ஐயப்பன், ஏலதாரர் கேட்டுள்ள ஏலக்கேள்வி 2009–10–ம் ஆண்டு கோரப்பட்டுள்ள ஏலக்கேள்வியினை விட 15% அதிகமாக உள்ளது. எனவே மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.11062/2012/அ1 )

**தீர்மானம் எண்:196. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு திரு.அய்யப்பன் என்பவரின் ஏலக்கேள்வியை ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்கள் – தரைதளம் 12, 13, முதல் தளம் 44, 45, 46, 53 ஆகியவற்றில் இயங்கி வரும் மின்சார வாரிய அலுவலகத்தின் வாடகை உரிமம் 29.02.2012 பிப்ரவரி மாதத்தோடு முடிவடைகிறது. மேலும் வாடகை உரிமத்தை மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து தர மின்சார வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. ஆகவே மின்சார வாரிய அலுவலகத்திற்கு வாடகை உரிமத்தினை 01.03.2012 முதல் 01.02.2015 வரை மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், 15% வாடகை உயர்வு செய்து அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | வாடகைததரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்து கொடுக்கப்படும் வாடகைத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 12, 13, 44 முதல் 46 வரை மற்றும் 53 | மின்சார வாரிய அலுவலகம் | 4,500/– | 5,175/– |

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.1578/2007/அ1 )

**தீர்மானம் எண்:197. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் 10, 32 (காலியிட கடை) க்கு ஜனவரி மாதத்தோடு வாடகை உரிமம் முடிவடைகிறது. ஆகவே அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான வாடகை தொகை உயர்வு செய்தும், வாடகை உரிமத்தை நீட்டிப்பு செய்தும் கேட்டு மனுதாரர் விண்ணப்பித்துள்ளார். ஆகவே 01.02.2012 முதல் 31.01.2015 வரை மூன்றாண்டுக்கு நீட்டிப்பு செய்தும், வாடகைத் தொகையில் இருந்து 15% உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | உரிமைதாரர் பெயர் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 10 | திரு.சி. ரவீந்திரன் | 926/– | 1,065/– |
| 2 | 32 (காலியிட கடை | திரு.எஸ்.எம்.யூசுப்கான் | 381/– | 438/– |

**<u>அ.குறிப்பு</u>** : மேற்படி வாடகைதாரர்களின் உரிமம் காலம் முடிவடைவதால் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து உரிமம் வழங்கலாம்.

( ந.க.எண்.2035/2011/அ2 )

**தீர்மானம் எண்:198. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. வாடகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டுகள் நீட்டிப்பு செய்து உரிமம் வழஙகிட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

2011–12–ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குத்தகை நிலுவை, கடை வாடகை மற்றும் இதர உரிமக் கட்டணங்களை உடனடியாக செலுத்தக் கேட்டு இந்நகராட்சி பொதுமக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் 01.03.2012 முதல் 31.03.2012 வரை விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/– க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.120 நாள் 29.02.2012 மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 29.02.2012 அன்று உள்ளூர் சவுண்ட்ஸ் நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்கள் பெயர் | விலைப்புள்ளி விகிதம் நாள் ஒன்றுக்கு (மைக் செட், டீசல், ஆட்டோ, பெட்ரோல், ஆயில் உட்பட) |
|---|---|---|
| 1 | பிரவீன் சவுண்ட்ஸ்,<br>குளச்சல். | ரூ. 2,100/– |
| 2 | லீலா சவுண்ட்ஸ்,<br>குளச்சல். | ரூ. 1,830/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் M/s.லீலா சவுண்ட்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** :1) M/s.லீலா சவுண்ட்ஸ், குளச்சல் நிறுவனத்தின் ரூ. 1,830/– க்கான குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

2)அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண்.4526/2007/அ1)

**தீர்மானம் எண்:199. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் நகர்மன்றக் கூடம் ஆகியவற்றில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், நகர்மன்றக் கூடத்தில் உடைந்த நாற்காலிகள் மற்றும் கழிவறை கதவுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண்.1370/2012/இ1 )

**தீர்மானம் எண்:200. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையின் முகப்பு மற்றும் உட்பகுதியிலுள்ள தரைப்பாக கடைகளை முன்வைப்பு தொகை செலுத்தி பொதுஏலம் மூலம் குத்தகைக்கு விடுவது குறித்து எவரும் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடராமல் இருப்பதற்காக District Court, Nagercoil, Sub Court Padmanabhapuram, Eraniel Munisiff Court ஆகிய நீதிமன்றங்களில் தடையாணை பெற்றமைக்க் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/– செலவுத்தொகை பட்டியல் பெறப்பட்டுள்ளது. ஆகவே வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/– திரு.லிவிங்ஸ்டன், நோட்டரி பப்ளிக் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.<u>குறிப்பு</u>** : மேற்படி பொருளின் அவசிய அவசரத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டு செலவுத்தொகை வழங்கப்பட்டதை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

(ந.க.எண். அ1/951/2012)

**தீர்மானம் எண்:201. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஒப்புதல் வழஙகப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட மெயின்ரோடு பகுதியில் அமைந்துள்ள கதவு எண்.2/55.எ.–க்கு திருமதி. ஸ்ரீதேவிஅம்மா என்பவர் பெயரில் கட்டிடம் ஜப்தி அறிவிப்பு தொடர்பாக 09.10.1993 முதல் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்போது இவ்வழக்கு ஐகோர்ட் W.P.No.30292/2002 என திருத்தம் செய்யப்பட்டு அதற்கான எதிர் வாதுரை தயார் செய்து நகராட்சி சார்பில் வாதிடுவது தொடர்பாக திரு.எஸ்.வி.துரை சோலைமலை, கூடுதல் அரசு வழக்கறிஞர், ஐகோர்ட், சென்னை அவர்களுக்கு கட்டணமாக ரூ. 15,000/– செலவுத் தொகை பட்டியல் பெறப்பட்டுள்ளது. ஆகவே வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 15,000/– திரு.எஸ்.வி.துரை சோலைமலை, கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.<u>குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.393/2012/அ1)

**தீர்மானம் எண்:202. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 11 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவற்றில் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, நகராட்சி அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கொட்டில்பாடு கோயில் பின்புறம் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றை பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீரின் சுத்தம் கருதியும் ஒப்பந்த அடிப்படையில் ரூ.15,000/– மதிப்பீட்டில் சுத்தம் செய்வதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 07.03.2012 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 14,780/–<br>(மதிப்பீட்டை விட 0.03% குறைவு ) |
| 2. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 16,000/–<br>(மதிப்பீட்டை விட 8.22% கூடுதல் ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1) மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/–க்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.8013/2011/இ2)

**தீர்மானம் எண்:203. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளி சந்திப்பிலிருந்து துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் 4'' பிவிசி பிரதான குழாய் மற்றும் மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் 4'' ஜி.ஐ.வினியோக குழாய் மற்றும் இந்தியன் வங்கி முன்புறத்திலிருந்து மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் 4'' பிரதான குழாய் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டதால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டது. எனவே மேற்படி பழுதுகளை ரூ. 22,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 07.03.2012 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 22,030/–<br>(மதிப்பீட்டை விட 4.35% கூடுதல் ) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 21,110.20<br>(மதிப்பீட்டை விட 0.01% குறைவு ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு:** 1) மதிப்பீட்டுத் தொகை ரூ.22,000/–க்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1346/2012/இ2)

**தீர்மானம் எண்:204. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு 1–ல் கதவு எண்.15/26.எ. மற்றும் 15/51 ஆகியவற்றின் அருகில் குடிநீர் வினியோக குழாய்களில் அடைப்பு ஏற்பட்டதால் மேற்படி பகுதிகளில் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி ரூ.14,000/– மதிப்பீட்டில் மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 07.03.2012 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 14,063/–<br>(மதிப்பீட்டை விட 3.49% கூடுதல் ) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 13,586.65<br>(மதிப்பீட்டை விட 0.02% குறைவு ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1) மதிப்பீட்டுத் தொகை ரூ.14,000/—க்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1356/2012/இ2)

**தீர்மானம் எண்:205. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட வி.கே.பி.பள்ளி அருகில் 5''குடிநீர் பிரதான குழாய் மற்றும் கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகில் 5'' குடிநீர் பிரதான குழாய் ஆகியவற்றில் உடைவு ஏற்பட்டுள்ளதால் நகரின் குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி குழாய்களை மாற்றுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7,000/—க்கு இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 07.03.2012 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 6,546.75<br>(மதிப்பீட்டை விட 0.01% குறைவு ) |
| 2. | திரு.P. தங்கமணி<br>ஒப்பந்தத்தாரர் | ரூ. 7,021/–<br>(மதிப்பீட்டை விட 7.24% கூடுதல் ) |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1) மதிப்பீட்டுத் தொகை ரூ.7,000/—க்கு நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.C.சந்திரசேகர், ஒப்பந்தத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.8013/2011/இ2)

**தீர்மானம் எண்:206. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான Lift Ladder ஒன்றை வாங்குவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.7054/2011/இ1 )

**தீர்மானம் எண்:207. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட 8—வது வார்டு கோயில் அருகாமையில் அமைந்துள்ள கழிப்பறை ஒன்று சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. மேற்படி கழிப்பறை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத வகையில் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் செடி கொடிகள் வளர்ந்து பாம்பு போன்ற விஷத்தன்மையுள்ள ஜந்துக்கள் காணப்படுவதுடன் அருகில் உள்ள குடியிருப்புகளில் பாம்புகள் செல்வதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி கழிப்பறையை இடித்து மாற்றி விட்டு, அதே இடத்தில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.889/2012/இ1 )

**தீர்மானம் எண்:208. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சுனாமி சிங்காரவேலன் காலனியில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து ஒரே நேரம் மூன்று தெருக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது குடிநீர் குழாய் இணைப்பு அதிகரித்து வருவதால் எல்லா குடிநீர் குழாய் இணைப்புகளுக்கும் போதிய அளவு தண்ணீர் சீராக கிடைப்பதில்லை. எனவே மேற்கண்ட தெருக்களுக்கு தனித்தனியாக குடிநீர் விநியோகம் செய்ய இரண்டு 2'' சுவிஸ் வால்வுகள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1318/2012/இ2 )

**தீர்மானம் எண்:209. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ்.காலனியில் உள்ள போர்வெல் எண்.16, வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள போர்வெல் எண்.6 ஆகிய போர்களில் உள்ள கேபிள் ஒயர் பழுதடைந்துள்ளது. ஆகவே மேற்கண்ட கேபிள் ஒயர்–ஐ மாற்றி புதிய கேபிள் ஒயர் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 60,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1314/2012/இ2 )

**தீர்மானம் எண்:210. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பூக்குழி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் போது அப்பகுதிகளுக்கு குடிநீர் சீராக கிடைப்பதில்லை. ஆகவே ஒற்றைக்கண் பாலத்தில் உள்ள 2''பிவிசி பகிர்மானக் குழாயில் உள்ள End Cap–யை எடுத்துவிட்டு பூக்குழி 2'' பிவிசி பகிர்மானக் குழாயுடன் நீட்டித்து இணைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.12,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1316/2012/இ2 )

**தீர்மானம் எண்:211. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பழைய குளச்சக்கடை தெருவின் இறுதிப்பகுதி மிகவும் தாழ்வான பகுதியாக இருப்பதால் தண்ணீர் தாழ்வான பகுதிக்கு சென்று விடுகிறது. எனவே மேற்கண்ட தெருவின் மையப்பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக இல்லை. எனவே மேற்கண்ட பகுதியில் 3'' Sluice Valve அமைத்து சீரான தண்ணீர் வழஙகுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 6,800/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1315/2012/இ2 )

**தீர்மானம் எண்:212. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் Pump Room அருகில் மார்க்கெட் டாங்க் செல்லும் 6'' Pumping line உடைவு ஏற்பட்டு உள்ளது. மேலும் அரசு மருத்துவமனை எதிரில் உள்ள Double set Air valve –யின் அருகில் Pumping line உடைவு ஏற்பட்டு உள்ளது. மேற்காணும் உடைவுகளை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 15,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1320/2012/இ2 )

**தீர்மானம் எண்:213. அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

**குளச்சல் நகர்மன்றத்தின் 3–வது வார்டு உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

குளச்சல் நகராட்சி பகுதியில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26–ம் தேதி ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டு உயிருக்கு பயந்து ஓடும் போது உடைமைகளையும், ஆவணஙகளையும் இழந்தவர்கள் ஏராளம். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் இந்நகராட்சியில் பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் போது பல்வேறு ஆவணங்களை சமர்ப்பிக்க கேட்டு அலைக்கழிக்கப்படுகின்றனர். இதனால் ஏற்கெனவே பாதிப்புக்குள்ளான மக்கள் மீண்டும் வேதனைக்கு ஆளாகுவதோடு ஆவணங்களை தொலைத்தவர்கள் மீண்டும் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியாமல் அல்லல்படுகின்றனர். எனவே பிறப்பு இறப்பு சான்றிதழ் வேண்டி விண்ணப்பிக்கும் இந்நகராட்சி மக்களை பல்வேறு ஆவணங்களை கேட்டு நிர்ப்பந்திக்காமல் கருணை அடிப்படையில் விதிவிலக்கு வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:214. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

**குளச்சல் நகர்மன்றத்தின் 3–வது வார்டு உறுப்பினர் திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை சாலையிலிருந்து பள்ளிரோட்டில் நடைபாதையுடன் கூடிய சாலை அமைக்கும் போது அண்ணாசிலை அருகில் நீரூற்றுடன் கூடிய பூங்கா அமைத்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:215. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

**குளச்சல் நகர்மன்றத்தின் 20–வது வார்டு உறுப்பினர் திரு.எம்.ஏ.ரஹீம் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்**

(1) குளச்சல் பகுதி மக்கள் கேரளாவில் மீன்பிடி தொழில் செய்வதற்கு கேரளா செல்வதற்கு வசதியாக கேரள அரசால் விடப்பட்ட பஸ் வசதி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். எனவே நிறுத்திவைக்கப்பட்ட பஸ் வசதியை மீண்டும் இயக்க கோரி சம்மந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளி பேருந்து நிறுத்தத்தை விரைவு பேருந்து நிறுத்தமாக மாற்றுவதற்கு நாகர்கோவில் போக்குவரத்து அதிகாரிகளிடம் 31.10.2010 மற்றும் 12.12.2011 ஆகிய தேதிகளில் மனு கொடுத்தும் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளி பேருந்து நிறுத்தத்தை விரைவு பேருந்து நிறுத்தமாக மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள போக்குவரத்து அதிகாரிகளை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:216. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(3)

**பொருள் எண். 27**

**குளச்சல் நகர்மன்றத்தின் 24–வது வார்டு உறுப்பினர் திருமதி.வி.சாந்தி அவர்கள் கொண்டுவரும் தீர்மானம்.**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரையிலிருந்து கதவு எண்.29/1.எ. ஸ்ரீதேவி இல்லம் வீட்டின் முன்புள்ள தார்ச்சாலையினை வி.கே.பி. சாலை என பெயர் பதிவு செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்:217. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி